**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காங்கேயம்**

**முன்னிலை:– செல்வி.D. தேன்மொழி, பி.ஏ.,பி.எல்., எல்எல்.எம்.,**

குற்றவியல் நீதித்துறை நடுவர், காங்கேயம்

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 05 ம் நாள் வியாழன்கிழமை

**CC –103/2024**

(CNR No.TNTI15-000321-2024)

| Statement as per Rule 106 of the Criminal Rules of Practice, 2019 | | |
|---|---|---|
| 1. | வழக்கு எண். | C.C.No: 103 of 2024 |
| 2. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். (Name of the Police Station and Crime Number) | அரசுக்காக காவல் ஆய்வாளர், காங்கேயம் காவல் நிலையம், (குற்ற எண். 666/2023) ... புகார்தாரர் |
| 3. | எதிரியின் பெயர் (Name of the Accused) | தங்கராஜ் (56/2023) த/பெ. முத்துசாமி. 91, மான்றாடியார் நகர், குட்டப்பாளையம், காங்கேயம் தாலூகா, திருப்பூர் மாவட்டம். ... எதிரி |
| 4. | எதிரியின் தந்தை பெயர் (Father's Name) | |
| 5. | எதிரியின் தொழில் (Occupation) | |
| 6. | எதிரியின் முகவரி (Residence) | |
| 7. | எதிரியின் வயது (Age) | |
| 8. | குற்ற நிகழ்வு நாள் (Date of occurrence) | 24.12.2023 |
| 9. | புகார் தேதி (Date of complaint) | 25.12.2023 |
| 10. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் (Date of Arrest) | 27.12.2023 |
| 11. | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் (Date of Release on Bail) | 27.12.2023 |
| 12. | Date of Commitment | Not Applicable |
| 13. | விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி (Date of commencement of Trial) | 19.06.2025 |
| 14. | விசாரணை முடிக்கப்பட்ட தேதி (Closure of Trial) | 24.02.2026 |
| 15. | தண்டனை அல்லது உத்தரவு (Sentence or order) | எதிரியின் மீதான இ.த.ச பிரிவு 199(A) MV |



D THENMOZHI Digitally signed by D THENMOZHI Date: 2026.03.05 19:58:06 +0530

| | | |
|---|---|---|
| | | Act குற்றச்சாட்டுகள் **அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படாததால்** எதிரி மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளி அல்ல எனத் தீர்மானித்து எதிரியை **கு.வி.மு.ச. பிரிவு 255(1)ன் படி விடுதலை** செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. (ii) எதிரி ஏற்கனவே இந்நீதிமன்றத்திற்கு வழங்கியிருந்த பிணைமுறி பத்திரத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது. |
| 16. | தீர்ப்பின் நகல் வழங்குதல் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த முடிவு (Service of copy of judgment or finding on accused) | Yes. Copy of the Judgment uploaded on the CIS and made available on E-courts portal |
| 17. | கால தாமதத்திற்கான காரணம் (Explanation of delay) | No such inordinate delay |

இம்மனுவானது இறுதியாக 24.02.2026ம் தேதியன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, குற்ற முறையிடுபவர்/புகார்தாரர் தரப்பில் வழக்கறிஞர் அரசு குற்ற உதவி வழக்கறிஞர் நிலை 2 காங்கேயம் அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.வடிவேல்சாமி.,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், இதுநாள் வரையில் நிலுவையில் இருந்து வந்த வழக்கின் ஆவணங்கள், சாட்சியங்களை பரிசீலனை செய்த பின்பு இருதரப்பு வாதங்களையும் கேட்டு இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

<u>**தீர்ப்புரை**</u>

இந்த வழக்கில் எதிரியின் மீது சட்டப்பிரிவு 199(A) MV Act ன் கீழ் குற்றம் முறையிடப்பட்டுள்ளது.

**<u>1. குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்</u>**

1.1) கடந்த 24.12.2023ம் தேதி மாலை சுமார் 18.30 மணியளவில் முத்தூர் - நத்தக்காடையூர் ரோட்டில், அர்ச்சனாபுரம், சதீஷ் வீடு அருகில் இவ்வழக்கின் சாட்சி 2 பெருமாள் என்பவர் TN 56 D 6532 TVS XL Super என்ற இருசக்கர வாகனத்தை ஓட்டிக்கொண்டும், பின் சீட்டில் இவ்வழக்கின் இறந்துபோன



D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.05 19:58:20 +0530

ராஜேந்திரன் என்பவரை உட்கார வைத்துக்கொண்டும், கிழக்கிலிருந்து மேற்காக வந்துள்ளார். அப்போது எதிரி தங்கராஜ் என்பவரது பொறுப்பில் உள்ள TN 42 Y 4484 Mahindra Jeeto என்ற வாகனத்தை அவரது அனுமதியுடன், இவ்வழக்கின் இளஞ்சிறார் ஜீவானந்தம் என்பவர் வாகனத்தை ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் ஏதும் இல்லாமல், அதே ரோட்டில், சாட்சி 2 மற்றும் இறந்துபோன ராஜேந்திரன் ஆகியோர்களுக்கு எதிரி திசையில், மேற்கிலிருந்து கிழக்காக வேகமாகவும் கவனக்குறைவாகவும், மனித உயிருக்கும் உடமைக்கும் பங்கம் விளைவிக்கும் வகையில் ஓட்டிச்சென்று ராஜேந்திரன் என்பவருக்கு பலதரப்பட்ட காயத்தை உண்டாக்கி மரணம் விளைவித்த குற்றத்திற்காக எதிரி தங்கராஜ் என்பவர் மீது 199(A) MV Act பிரிவின் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக கூறி அரசு தரப்பில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேலும் இவ்வழக்கில் இளஞ்சிறார் ஜீவானந்தம் என்பவர் மீது மாண்புமிகு திருப்பூர் மாவட்டம் இளஞ்சிறார் நீதிக்குழுமம் அவர்கள் முன்பாக 279, 304(A) IPC r/w 181 (4) MV Act ஆகிய சட்டப்பிரிவுகளில் தனியாக குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1.2) இவ்வழக்கு இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரி அழைப்பாணையின் பேரில் நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் கு.வி.மு.ச. பிரிவு 207–ன் படி எதிரிக்கு வழக்கு ஆவணங்கள் அனைத்தும் 26.05.2025 அன்று இலவசமாக வழங்கி போதிய அவகாசம் கொடுத்து வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில் எதிரி மீது குற்றச்சாட்டு வனைய போதிய முகாந்தரம் இருப்பதாக தோன்றியதால் 19.06.2025 அன்று எதிரியின் மீது 199(A) MV Act ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்துள்ளார்.

## 3. அரசு தரப்பு சாட்சியங்களின் சாட்சியத்திலிருந்து தெரியவரும் வழக்கின் சுருக்கம்:

3.1) **அ.சா.1 திருமதி. சரஸ்வதி** என்பவர் சம்பவத்தை பற்றி புகார் அளித்தது குறித்து சாட்சியம் அளிப்பதாக அரசு தரப்பு சாட்சியாக சேர்க்கப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளார்.


D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.05 19:58:26 +0530

3.2) **அ.சா.2 திரு. பெருமாள்** என்பவர் சம்பவத்தை நேரில் பார்த்தது குறித்து சாட்சியம் அளிப்பதாக அரசு தரப்பு சாட்சியாக சேர்க்கப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளார்.

3.3) **அ.சா.3 திரு. சதிஷ்** என்பவர் சம்பவத்தை நேரில் பார்த்தது குறித்து சாட்சியம் அளிப்பதாக அரசு தரப்பு சாட்சியாக சேர்க்கப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளார்.

3.4) **அ.சா.4 திருமதி. கண்மணி** என்பவர் சம்பவத்தை கேள்விப்பட்டது குறித்து சாட்சியம் அளிப்பதாக அரசு தரப்பு சாட்சியாக சேர்க்கப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளார்.

3.5) **அ.சா.5 திரு. தங்கவேல்** என்பவர் பார்வை மகஜரில் கையெப்பம் செய்தது குறித்து சாட்சியம் அளிப்பதாக அரசு தரப்பு சாட்சியாக சேர்க்கப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளார்.

3.6) **அ.சா.6 திரு. அருண்** என்பவர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது குறித்தும், புலன் விசாரணை செய்யப்பட்டு எதிரி மீது குற்ற அறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**4. கு . வி . மு . ச பிரிவு 313(1)( b ) ன் படி வினவுதல்:**

4.1) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இவ்வழக்கின் எதிரிக்கு பாதகமான விபரங்கள் குறித்து எடுத்துக் கூறி குவிமுச பிரிவு 313(1)(b)ன் கீழ் 24.02.2026 அன்று வினவியபோது எதிரி அரசு தரப்பு சாட்சியங்களை பொய் சாட்சியம் என்றும், மேலும்



D THENMOZHI Digitally signed by D THENMOZHI Date: 2026.03.05 19:58:32 +0530

அவர்களது தரப்பில் விசாரிக்க சாட்சியங்கள் இல்லை என்றும் கூறினார். எனவே எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

**5. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை**

***இவ்வழக்கில் இனி காண வேண்டிய தீர்வு யாதெனில், அரசு தரப்பில் எதிரியின் மீதான இதச பிரிவு 199(A) MV Act ன் கீழான குற்றச்சாட்டுகள் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.***

**6. தீர்வு**

6.1) இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

6.2) எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் இந்த வழக்கு விபத்து சம்பவத்திற்கு எதிரி தான் காரணம் என்பது அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், விபத்தானது எதிரியால் நடைபெறவில்லை என்றும் இழப்பீடு பெறுவதற்காக இந்த வழக்கு தவறதலாக எதிரியின் மீது பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரி மீதான குற்றம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று எதிரியை விடுதலை செய்யக்கோரினார்.

6.3) இந்த வழக்கில் அரசு தரப்பில் புகார்தாரர் சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.1 சரஸ்வதி அவரது சாட்சியத்தில், கடந்த 2 வருடத்திற்கு முன்பு தேதி, மாதம் தற்போது ஞாபகம் இல்லை. எனது கணவருக்கு விபத்து ஏற்பட்டதாக எனது மகளுக்கு பெருமாள் என்பவர் போன் மூலம் தகவல் சொன்னதாக என்னிடம் எனது மகள் கூறினார் என்றும் தன்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும் விபத்து சம்பவம் குறித்து அதனை உறுதியூட்டும் விதமாக அ.சா.1 சரஸ்வதி புகார் (அ.சா.ஆ.1) அளித்துள்ளதாக அவரது சாட்சியத்தின் வாயிலாக தெளிவாகிறது.



D THENMOZHI Digitally signed by D THENMOZHI Date: 2026.03.05 19:58:37 +0530

6.4) மேலும் அ.சா.1 சரஸ்வதி தனது குறுக்கு விசாரணையில்

*"சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். விபத்தில் சம்பந்தப்பட்ட ஆட்டோ யாருக்கு பாத்தியப்பட்டது என்று தெரியாது என்றால் சரிதான். வாகனத்தை யார் ஓட்டிவந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.* என்று சாட்சியம் அளித்துள்ளதை பரிசீலனை செய்ததில் வழக்கு சம்பவ சமயத்தில் எதிரி தான் விபத்து சம்பவத்திற்கு என்ற விபரம் அரசு தரப்பில் அ.சா.1ன் சாட்சியத்தின் மூலமாக நிரூபணம் செய்யப்படவில்லை. மேலும் அ.சா.1ன் சாட்சியத்தை நன்கு ஆராய்ந்து பார்த்ததில் அ.சா.1 சரஸ்வதி என்பவருக்கு விபத்தை பற்றி நேரடியாக எதுவும் தெரியவில்லை என்பதும் சம்பவத்தை பற்றி கேள்விப்பட்டு தான் புகார் அளித்துள்ளார் என்பதும் தெரிய வருகிறது. மேலும் அவரது சாட்சியம் கேள்வி நிலை சாட்சியமாகவே கருதப்படுகிறது.

6.5) மேலும் பெருமாள் அ.சா.2 இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ளார். அவரது சாட்சியத்தில் கடந்த 2 வருடத்திற்கு முன்பு தேதி, மாதம் ஞாபகம் இல்லை. சென்னிமலை செல்வதற்காக முத்தூரில் இருந்து நத்தக்காடையூர் ரோட்டில் செல்லும்போது நத்தக்கடையூருக்கு அருகே நான் வேலைக்கு செல்வதன் மூலம் பழக்கமான ராஜேந்திரன் என்பவருடன் நானும் அவரும் டிவிஎஸ் இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருக்கும்போது அவ்வழியாக சென்ற டெம்போ மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது. விபத்தில் ராஜேந்திரனுக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. எனக்கு லேசான காயம் ஏற்பட்டிருந்தது பின்னர் மேல் சிகிச்சைக்காக திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு செல்ல பரிந்துரைத்தார்கள். அங்கு சென்று மருத்துவர்கள் பரிசோதித்துவிட்டு ராஜேந்திரன் இறந்துவிட்டதாக கூறினார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.2 பெருமாள் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் *"வாகனத்தை யார் ஓட்டி வந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்தில் இறந்த ராஜேந்திரன் விபத்தின்போது மது அருந்திவிட்டுத்தான் வாகனத்தை ஓட்டிவந்தார் என்றால் சரிதான்"* என்று



D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.05 19:58:45 +0530

சாட்சியம் அளித்துள்ளதை பரிசீலனை செய்ததில் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 ன் சாட்சியம் இவ்வழக்கு விபத்து சம்பவத்திற்கு ஆஜர் எதிரி தான் காரணம் என்றும் எதிரியை தெளிவாக அடையாளப்படுத்தும் விதமாக சாட்சியம் அளிக்கவில்லை.

6.6) மேலும் சதிஷ் அ.சா.3 இவ்வழக்கில் மற்றொரு கண்ணுற்ற சாட்சியாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ளார். அவரது சாட்சியத்தில் கடந்த 2 வருடத்திற்கு முன்பு மாலை சுமார் 6.00 மணியளவில் நத்தக்காடையூர் – முத்தூர் ரோட்டில் உள்ள எனது தோட்டத்தில் நான் இருந்தேன் என்றும் அப்போது சத்தம் கேட்டதாகவும் அங்கு சென்றுபார்த்த போது டிவிஎஸ் இருசக்கர வாகனத்தில் வந்தவர் மீது டெம்போ மோதி விபத்து ஏற்பட்டு இருவரில் ஒருவருக்கு பலத்த காயம் ஏற்பட்டிருந்தது என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.3 சதிஷ் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் *"விபத்து சம்பந்தமாக நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனம் யாருடைய வாகனம் என்று தெரியாது என்றால் சரிதான். விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தை விபத்து சமயத்தில் யார் ஓட்டி வந்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்தானது ரோட்டின் மையப்பகுதியில் நடைபெற்றது என்றால் சரிதான். விபத்தில் சம்பந்தப்பட்ட இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த ராஜேந்திரன் மதுபோதையில் இருந்தார் என்றால் சரிதான்."* என்று சாட்சியம் அளித்துள்ளதை பரிசீலனை செய்ததில் கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 சதிஷ் தான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்று கூறியிருப்பதால் அ.சா.3 ன் சாட்சியத்தை கண்ணுற்ற சாட்சியாகவோ, நேரடி சாட்சியாகவோ கருத இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

6.7) மேலும் அ.சா.4 கண்மணி இவ்வழக்கில் கேள்விநிலை சாட்சியாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ளார். அவரது சாட்சியத்தில் கடந்த 24.12.2023 ஆம் தேதியன்று எனது அப்பா எங்களிடம் வேலைக்கு செல்வதாக சொல்லிவிட்டு பெருமாள் என்பவருடன் இருசக்கர வாகனத்தில் சென்றபோது டெம்போ இடித்து



D THENMOZHI Digitally signed by D THENMOZHI Date: 2026.03.05 19:58:57 +0530

விபத்து ஏற்பட்டுவிட்டதாக பெருமாள் என்பவர் எனது மச்சான்டார் மகன் ஜீவா என்பவருக்கு போன் மூலம் தகவல் சொன்னார். பின்னர் ஜீவா எனக்கு போன் செய்து தகவல் சொன்னார். என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் *"சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். விபத்தில் சம்பந்தப்பட்ட ஆட்டோ யாருக்கு பாத்தியப்பட்டது என்று தெரியாது என்றால் சரிதான். வாகனத்தை யார் ஓட்டிவந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்"* என்று கூறியுள்ளார். அ.சா.4 கண்மணியின் சாட்சியம் கேள்விநிலை சாட்சியமாக அமைந்துள்ளதால் அவரது சாட்சியம் இவ்வழக்கில் அரசு தரப்பிற்கு உதவும் வகையில் அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

6.8) மேலும் அ.சா.5 தங்கவேல் அவரது முதல் விசாரணையில் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து சம்பவ இடத்தை பார்த்து பார்வை மகஜர்(அ.சா.ஆ.2) மற்றும் மாதிரி வரைபடம் தயார் (அ.சா.ஆ.4) செய்தார்கள் என்றும் அதில் தான் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6.9) வழக்கு கோப்புகளை பார்வையிட்டு அதன் அடிப்படையில் கூடுதல் சாட்சியம் அளித்துள்ள காங்கேயம் காவல் ஆய்வாளர் திரு.அருண் (அ.சா.6) அவரது சாட்சியத்தில் கடந்த 25.12.2023 ஆம் தேதியன்று காலை 5.00 மணிக்கு காங்கேயம் காவல் நிலைய முதல் நிலைக் காவலர் திரு.பிரபாகரன் நிலைய அலுவலில் இருந்தபோது சரஸ்வதி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து பூர்வமான புகாரினை பெற்று அதன் தன்மைக்கேற்ப காங்கேயம் காவல் நிலையக் குற்ற எண். 666/2023 U/S: 279, 304(A) IPC ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன் அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். பின்னர் இவ்வழக்கு கோப்பை திரு.காமராஜ் அவர்கள் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 25.12.2023 ஆம் தேதியன்று காலை 6.30 மணிக்கு சம்பவ இடத்தை ஆஜர் சாட்சிகள் செந்தில்குமார் மற்றும் தங்கவேல் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து வாக்குமூலங்கள் பதிவு


D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.05 19:59:06 +0530

செய்துள்ளார்கள். பின்னர் சாட்சிகள் சரஸ்வதி, பெருமாள், சதீஸ், ராஜா, ராஜேஷ், கண்மணி, மகேந்திரன், செந்தில்குமார், தங்கவேல், நித்யா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கில் எதிரி தங்கராஜ் என்பவரின் சம்மதத்துடன் அவரது பொறுப்பில் உள்ள TN 42 AY 4484 என்ற வாகனத்தை இளஞ்சிறார் ஜீவானந்தம் என்பவர் ஓட்டி விபத்தை ஏற்படுத்தியதால் சட்டப்பிரிவினை 279, 304(A) IPC வில் இருந்து 279 304(A) மற்றும் 3 r/w 181(4) MV மற்றும் 199(A) MV ஆக சட்டப்பிரிவினை மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த முதல் நிலைக்காவலர் திரு. பிராபகரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் புலன் விசாரணை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவு 279 304(A) மற்றும் 3 R/W 181(4) MV மற்றும் 199(A) MV ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

மேலும் அசா.6 காவல் ஆய்வாளர் திரு.அருண் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில்,

*"விபத்தில் சம்பந்தப்பட்ட நான்கு சக்கர வாகனம் எதிரியின் பெயரில் இல்லை என்றால் சரிதான். புகாரில் நான்கு சக்கர வாகனத்தை மைனர் ஓட்டியதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.* இவ்வழக்கில் அசா.6 ன் சாட்சியத்தை பரிசீலனை செய்ததில் இவ்வழக்கு விபத்திற்கு எதிரி காரணமில்லை என்றும் சம்பவத்தன்று மைனரான ஜீவனாந்தம் என்பவரிடம் எதிரி தான் வாகனத்தை கொடுத்தார் என்பதும் தெளிவாக விசாரணை செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

6.10) மேலும் விபத்தில் இறந்துபோன ராஜேந்திரன் என்பவரது உடலை பிரேத பரிசோதனை செய்த திருப்பூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவர் திரு.முத்துக்குமார் இறந்துபோன ராஜேந்திரன் என்பவரது இறப்பின் காரணம் குறித்து ***"The deceased dide of shock and hemorrhage due to blunt injuries sustained to head face and neck"*** என்று சான்று வழங்கியுள்ளார். மேற்படி அ.சா.ஆ.11


D THENMOZHI Digitally signed by D THENMOZHI Date: 2026.03.05 19:59:32 +0530

பிரேத பரிசோதனை சான்றிதழை பரிசீலிக்கும் போது விபத்தில் இறந்து போன நபருக்கு விபத்து சமயத்தில் காயங்கள் ஏற்பட்டது என்பதும் அந்த காயங்களால் தான் அவர் இறந்துள்ளார் என்பது நிரூபணம் செய்யப்படவில்லை இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

6.11) மேலும் இந்த வழக்கில் அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள அ.சா.ஆ.6 மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் படி விபத்துக்கு வாகனத்தின் இயந்திரக்கோளாறுகள் ஏதும் காரணமில்லையெனவும் தெரிய வருகிறது.

6.12) அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான அரசு தரப்பு சாட்சியங்கள் தகுந்த சாட்சியம் அளிக்காத நிலையில் இவ்வழக்கில் வழக்கு கோப்புகளை பார்வையிட்டு அதனடிப்படையில் கூடுதல் சாட்சியம் அளித்துள்ள காவல் ஆய்வாளர் திரு. அருண் (அ.சா.6)ன் சாட்சியத்தை மட்டும் நிலைமுறை சாட்சியமாக எடுத்துக்கொள்ள முடியாது. மேற்படி அ.சா6 ன் சாட்சியத்தை வைத்துக்கொண்டு, எதிரி மீதான வழக்கினை தீர்மானிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேற்காண் சூழ்நிலைகளும், அ.சா.1 சரஸ்வதி சாட்சியமும் எதிரி மீதான அரசு தரப்பு வழக்கின் மீது பெரும் சந்தேகத்தினை ஏற்படுத்துகின்றது.

6.13) இவ்வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான மொத்த சாட்சிகளின் சாட்சியத்தை ஒரு சேர பரிசீலனை செய்ததில் இவ்வழக்கு சம்பவ சமயத்திற்கு எதிரியின் செயல் தான் காரணம் என்பதும் அதன் மூலம் ராஜேந்திரன் என்பவர் இறந்துள்ளதாக குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை.

6.14) மேற்படி சாட்சியங்களை வைத்து அரசு தரப்பு வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று உறுதி செய்ய இயலாது. ஏனெனில் அ.சா.1 சரஸ்வதி புகார்தாரர் சாட்சியாக உள்ளார் மேலும் அ.சா.2, பெருமாள் மற்றும் அ.சா.3 சதிஷ் ஆகியோர்கள் கண்ணுற்ற சாட்சியாக உள்ளார்கள். இவ்வாறு இருக்கையில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான



D THENMOZHI Digitally signed by D THENMOZHI Date: 2026.03.05 19:59:40 +0530

சாட்சிகள் இவ்வழக்கிற்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. ஆனால் மேலே விவரிக்கப்பட்டுள்ளவாறு அ.சா.1, முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் எதிரியின் குற்றங்களை நிரூபணம் செய்யும் வகையில் தெளிவாக எந்தவொரு சாட்சியமும் அளிக்கவில்லை. எனவே அரசு தரப்பு வழக்கினை நிரூபணம் செய்யும் வகையில் சாட்சியம் அளித்திடாதது அரசு தரப்பிற்கு பாதகமாக அமைவதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

6.15) மேற்படி பரிசீலனைகளின் அடிப்படையில் எதிரியின் மீதான 199(A) MV Act ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசுதரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து அவரை விடுதலை செய்வது நீதியின்பால் உகந்தது என கருதி, அவ்வாறே தீர்மானித்து மேற்கண்ட பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

**இறுதியாக,**

(i) *எதிரியின் மீதான* 199(A) MV Act *ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படாததால் எதிரி மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளி அல்ல எனத் தீர்மானித்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 255(1)ன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.*

(ii) *எதிரி ஏற்கனவே இந்நீதிமன்றத்திற்கு வழங்கியிருந்த பிணைமுறி பத்திரத்தை மேல்முறையீட்டு காலத்திற்குபின் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.*

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 05 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் வைத்து அவையறிய பகரப்பட்டது.

D THENMOZHI Digitally signed by D THENMOZHI Date: 2026.03.05 19:59:53 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்
காங்கேயம்.

**<u>இணைப்பு:</u>**

**<u>அரசு தரப்பு சாட்சிகள் :</u>**

| அ.சா வரிசை எண் | பெயர்கள் | தேதி |
|---|---|---|
| அ.சா.1 | சரஸ்வதி | 03.02.2026 |
| அ.சா.2 | பெருமாள் | 03.02.2026 |
| அ.சா.3 | சதிஷ் | 03.02.2026 |
| அ.சா.4 | கண்மணி | 03.02.2026 |
| அ.சா.5 | தங்கவேல் | 03.02.2026 |
| அ.சா.6 | அருண் | 17.02.2026 |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>** :

அ.சா.ஆ.1 – புகார்

அ.சா.ஆ.2 – பார்வை மகஜர்

அ.சா.ஆ.3 – முதல் தகவலறிக்கை

அ.சா.ஆ.4 – மாதிரி வரைபடம்

அ.சா.ஆ.5 – பிரேத விசாரணை அறிக்கை

அ.சா.ஆ.6 – மோட்டார் வாகன ஆய்வறிக்கை (TN 42 AY 4484)

அ.சா.ஆ.7 – மோட்டார் வாகன ஆய்வறிக்கை (TN 56 D 6532)

அ.சா.ஆ.8 – விபத்து பதிவேடு (ராஜேந்திரன்)

அ.சா.ஆ.9 – விபத்து பதிவேடு (ராஜேந்திரன்)

அ.சா.ஆ.10 – இறப்பு இண்டிமேசன் (ராஜேந்திரன்)

அ.சா.ஆ.11 – பிரேத பரிசோதனை சான்று

அ.சா.ஆ.12 – சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை

**<u>எதிரி தரப்பு சாட்சிகள், எதிரி தரப்பு சான்றாவணங்கள், எதிரி தரப்பு சான்று பொருள்கள்:–</u>**

இல்லை.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.05 20:00:31 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்.

**குறிப்பு:**

1. வழக்கு விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்து வந்துள்ளார்.
2. எந்தவொரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. முடிவாக, எதிரி வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்டார்.
4. வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
5. தீர்ப்புரை நகல் கனம் முதன்மை நீதித்துறை நடுவர் திருப்பூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.



D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.05 20:00:38 +0530